
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**956**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**21**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!




2006-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலை எதிர்கொண்ட கழகம், தனது சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை, மக்கள் முன் வைத்தது. அந்த அறிக்கையில் கழகம் கொடுத்த பல வாக்குறுதிகளில் ஒன்று, 'தமிழ்நாட்டில் பள்ளிகளில் கட்டாய தமிழ் கற்றல்'.

'தமிழ்நாட்டில் செயல்படும் பலவகை பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் அனைவரும், தமிழ் மொழியை ஒரு பாடமொழியாகப் பயின்றிட ஏற்ற வழி காண்போம்' என்றது தேர்தல் அறிக்கை.

சொல்வதைச் செய்யும் கொள்கையில் உறுதியாக நிற்கும் கழகம், ஆட்சிக்கு வந்ததும், ஆளுநர் உரையிலே அந்தத் தேர்தல் வாக்குறுதியை இடம் பெறச் செய்தது.

தேர்தல் அறிக்கையைத் தொடர்ந்து, ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, அந்த ஆண்டு மே மாதம், வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் (பத்தி-40) இடம்பெற்றது தமிழ் பாடமொழி அறிவிப்பு. 'தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை' என்ற நாணமுறும் நிலையைப் போக்க, நம் தமிழ் மொழியை, பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடங்கும். இது வரும் ஆண்டுகளில், படிப்படியாக பத்தாம் வகுப்புவரை விரிவுபடுத்தப்படும்' என்று அறிவிக்கப்பட்டது. அறிவித்தவர் தமிழர் நலன் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர்.

### குறிக்கோள்கள் – காரணங்கள்

அந்த சட்டம் 'தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் – 2006'.

அதன் குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் குறித்து, அறிக்கையில் கூறப்பட்டதாவது:

1. பள்ளிகளில் தமிழ்ப் பாடத்தைக் கற்க ஏற்பாடு செய்யுமாறு கோரி பெற்றோர்கள், கல்வியாளர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரிக்கைகளைப் பெற்று வருகிறது.

2. மே 24, 2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரையில், வரும் கல்வியாண்டு முதல் மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களும் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயமாகக் கற்பதை உறுதி செய்வதற்காக, கல்வியாளர்களுடன் கலந்தாலோசித்து, விரைவில் நடவடிக்கை எடுக்க அரசு உறுதியாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

3. அதன்படி, தமிழ்நாட்டின் அலுவல் மொழியும் உலகின் பண்டைய, செம்மொழிகளில் ஒன்றான தமிழைக் கற்காத மாணவர்களின் நிலையை மாற்றுவதற்காக, விரிவான ஆலோசனைக்குப் பிறகு, 2006 மே 25 அன்று அரசு கூட்டிய தமிழ் அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களின் கூட்டத்தில், 2006-2007 கல்வியாண்டிலிருந்து மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில், தமிழை ஒரு பாடமாக மாற்றவும், பின்வரும் கல்வி முறையை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதாவது,

பகுதி I – தமிழ் (கட்டாயமானது)

பகுதி II – ஆங்கிலம் (கட்டாயமானது)

பகுதி III – கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பிற பாடங்கள்.

பகுதி IV – தமிழையோ அல்லது ஆங்கிலத்தையோ தாய்மொழியாகக் கொள்ளாத மாணவர்கள் தங்கள் தாய்மொழியை விருப்பப் பாடமாகக் கற்கலாம்.

4. அரசு, ஆழ்ந்த பரிசீலனை மற்றும் பகுப்பாய்விற்குப் பிறகு, 2006-2007 கல்வியாண்டிலிருந்து படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில், தமிழ் மொழியைக் கட்டாய பாடங்களில் ஒன்றாகக் கற்பிப்பதற்கான சட்டத்தை இயற்ற முடிவு செய்துள்ளது, என்றது.

> **தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த தீர்மானத்தின்படி, இளங்கலை வகுப்பில் தமிழ் பயிற்று மொழியானது. 1969-1970-ஆம் ஆண்டில் இளம் அறிவியல் வகுப்பில் தமிழ் பயிற்றுமொழி என்பதை கொண்டு வந்தார் கலைஞர்.**

ஜூன் 12, 2006 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழில், இந்தச் சட்டம் வெளியிடப்பட்டது.

அந்தச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்மொழியை ஒரு பாடமாக கற்பிக்க வேண்டும். குறிப்பாக, 2006-2007-ஆம் கல்வியாண்டிலிருந்து, மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் படிப்படியாக தமிழைக் கற்பிக்க வகை செய்தது.

### அந்த அரசாணையில் குறிப்பிட்டவாறு,

I. மாநில அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் எந்தவொரு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி; அல்லது

II. (ஆ) அரசியலமைப்பின் பிரிவு- 30 இன் பிரிவு- (1) இன் கீழ் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் சிறுபான்மைப் பள்ளி உட்பட எந்தவொரு தனியார் கல்வி நிறுவனத்தால் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படும் அல்லது பராமரிக்கப்படும் எந்தவொரு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி, மாநில நிதியிலிருந்து உதவி பெறுகிறதா இல்லையா; அல்லது

III. அரசியலமைப்பின் பிரிவு - 30 -இன் பிரிவு- (1) இன் கீழ், நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் சிறுபான்மைப் பள்ளி உட்பட எந்தவொரு நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆங்கிலோ-இந்தியன் பள்ளி அல்லது ஓரியண்டல் பள்ளி, மாநில நிதியிலிருந்து உதவி பெறுகிறதா இல்லையா; அல்லது

IV. இதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப் படக்கூடிய பிற பள்ளிகள் என அனைத்துப் பள்ளிகளிலும், 2006-2007 கல்வியாண்டிலிருந்து I ஆம் வகுப்பு வரையிலும், 2007-2008 கல்வியாண்டிலிருந்து I மற்றும் II ஆம் வகுப்பு வரையிலும், படிப்படியாக, I முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் என உறுதியான கொள்கை முடிவெடுத்தது கலைஞர் அரசு.

அந்தச் சட்டம் வரும் வரை, தமிழ்நாட்டில் கல்வி கற்பவர்கள் தமிழைப் படிக்காமலேயே பல்கலைக்கழகம் வரை பட்டம் பெற்று வெளிவர முடியும். பேரறிஞர் அண்ணா ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பயிற்றுமொழிச் சட்டத்தை, தமிழ்நாட்டில் முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர முடியாத நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர், அதற்கு முடிவு கட்டினார். தமிழ்ச் செம்மொழிப் பாதையில், அந்த முள்ளை அகற்றுவதற்கு கலைஞர் நடத்திய போராட்டங்கள் நிறைய...

குறிப்பாக, 1968 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த தீர்மானத்தின்படி, இளங்கலை வகுப்பில் தமிழ் பயிற்று மொழியானது. 1969-1970 ஆம் ஆண்டில் இளம் அறிவியல் வகுப்பில் தமிழ் பயிற்றுமொழி என்பதை கொண்டு வந்தார் கலைஞர். ஆனாலும், பல்வேறு சட்டச் சிக்கல்களால் அண்ணாவின் தமிழ்ப் பயிற்று மொழி தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதேநேரத்தில், தான் ஆட்சியில் அமர்ந்த 1989 மற்றும் 1996 காலகட்டங்களில் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்துப் பணிகளையும் முன்நகர்த்திக் கொண்டே இருந்தார். சட்ட இடர்களையும் சந்தித்து வந்தார்.

அதேநேரத்தில், தமிழ் கற்காமலேயே தமிழ்நாட்டில் பட்டம் பெறலாம் என்கிற அடிப்படை முரண்பாட்டை அகற்றுவதற்காக, தி.மு.கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட 'தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் – 2006'-ஐ எதிர்த்தும் சிலர் நீதிமன்றம் சென்றனர்.

...தொடரும்

## மானுட மேம்பாட்டுக்காக உடல் தான இயக்கம்!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரியின் முதலாம் ஆண்டு நினைவு நாள் 12.09.2025 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. அவருடைய உடல் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தானமாக கொடுக்கப்பட்டது. அந்த வகையில், சீத்தாராம் யெச்சூரியின் நினைவு தினத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கிளை, உடல்தான இயக்கத்தைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. உடல்தான இயக்கத்தில் முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டில் இருந்து, அரசியல் கட்சி ஒன்றே இப்படிப்பட்ட முன்னெடுப்பை எடுப்பது, உடல்தான இயக்கத்தை மேலும் வலுப்படுத்தும் என்று பலரும் பாராட்டி வருகின்றனர்.

இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டும் வகையில், முதன்முதலில் 2008-ஆம் ஆண்டு உடல் உறுப்பு தான திட்டத்தைத் தொடங்கிய மாநிலம் தமிழ்நாடு, தொடங்கிவைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 2008 – ஆம் ஆண்டு சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த ஹிதேந்திரனின், உடல் உறுப்புகளை பெற்றோர் தானம் செய்ய முன்வந்த நெகிழ்ச்சி சம்பவத்தை ஒட்டி, இத்திட்டம் தொடங்கப் பட்டது. ஹிதேந்திரனின் நினைவுநாள் 'உடல் உறுப்பு தான நாள்' என்றும் தி.மு.கழக அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்பிறகு 2,000க்கும் மேற்பட்டோரின் உடல்கள் தானமாக வழங்கப்பட்டு, 10,000க்கும் மேற்பட்டோருக்கு, தானமாக பெறப்பட்ட உடல் உறுப்புகள் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன. உடல் உறுப்பு தானத்தை விரிவுபடுத்தும் விதமாகவும், தானம் செய்வோரை கௌரவப்படுத்தும் விதமாகவும், உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள், இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என்று 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக, மருத்துவ ஆய்வுகளுக்காக உடல் தானம் செய்யும் வழக்கமும் தமிழ்நாட்டில் கணிசமாக அதிகரித்து வருகிறது. முன்மாதிரியாக, தமிழ்நாடு முதலமைச்சரும் உறுப்பு தானத்திற்குப் பதிவு செய்துள்ளார்.

அந்தவகையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், உறுப்பு தான பதிவுக்காக இயக்கம் தொடங்கப்படுவது முற்போக்கான, வரவேற்கப்பட வேண்டிய செயல். மறைந்தும் பயனுள்ளதாகட்டும் மானுட உடல்!

## ஃப்ளாஷ்பேக்



### பேரவைத் தொடக்க நிகழ்ச்சியில் தலைவர்!



ஆ.செந்தில்குமார்

1995-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஈரோடு மாவட்டக் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போது, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளராக இருந்தேன். மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்த பவானி ரங்கசாமியின் முயற்சியில், ஈரோடு ஸ்ரீவாசவி கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தலில் கண்ணன் என்ற மாணவர் பேரவைத் தலைவராக வெற்றி பெற்றார். அதையடுத்து, பேரவைத் தொடக்க விழாவை, தலைவரை அழைத்து வந்து நடத்தினோம். கூட்டம் முடிந்து, தலைவர் கார் சிறிது தூரம் வந்ததும், சிறு தொகையை போட்டு, 'நன்றியுடன் ஆ.செந்தில்குமார்' என்று எழுதி வைத்திருந்த கவரை அளித்து, வழிச்செலவுக்கு என்று சொன்னேன். சிரித்துக்கொண்டே பெற்றுக் கொண்டார். பின்னர், கல்லூரி எதிரில் அமைத்திருந்த கம்பத்தில் கொடி ஏற்றி வைத்தும் சென்றார் தலைவர். சிறு வயதில் தலைவரை அழைத்து, அவருக்கு வழிச்செலவு கொடுத்து கூட்டம் நடத்தும் வாய்ப்பு கிடைத்தது எனக்கு பெரும் மகிழ்ச்சி.

**– ஆ.செந்தில்குமார், மாவட்டத் துணைச் செயலாளர், ஈரோடு தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### 'நம்நாடு' பொறுப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'நம்நாடு' இதழின் ஆசிரியர் பொறுப்பை, 25.04.1955 முதல் புதிய பொதுச் செயலாளர் நாவலர் ஏற்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131